**மே – 15**

# தேசியச் செய்திகள்

## 6வது அமெரிக்கா-இந்தியா வான்போக்குவரத்து மாநாடு

- 6-வது அமெரிக்கா – இந்தியா வான்போக்குவரத்து மாநாடு (6th United States-India Aviation Summit) அண்மையில் 2018 ஆம் ஆண்டின் மே மாதம் 9-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை மஹாராஷ்டிரா மாநிலத்தின் மும்பையில் நடைபெற்றது.
- மத்திய சிவில் வான் போக்குவரத்துத்துறை அமைச்சர் (Union Minister for Civil Aviation) சுரேஷ் பிரபுவினால் இந்த மாநாடு முறையாகத் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்த மாநாடானது குடிமை வான் போக்குவரத்துத் துறையில் இந்தியா மற்றும் அமெரிக்காவிற்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக நடத்தப்படும் ஓர் தொழிற்நுட்ப கொள்கை மற்றும் வர்த்தக மன்றம் ஆகும்.
- இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை (biennial Summit) நடத்தப்படும் இந்த மாநாடானது மத்திய சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் (Ministry of Civil Aviation) மற்றும் அமெரிக்காவின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினால் (US Trade and Development Agency-USTDA) கூட்டிணைந்து நடத்தப்படுகின்றது.




# சர்வதேசச் செய்திகள்

## UNPCAP – ன் மூன்றாவது பதிப்பு


- ஆப்பிரிக்க கூட்டளிப்பாளர்களுக்கான ஐ.நா.வின் அமைதிகாப்புப் பயிற்சியின் (United Nations Peacekeeping Course for African Partners-UNPCAP) மூன்றாவது பதிப்பு அண்மையில் புதுதில்லியில் நடைபெற்றுள்ளது.
- அமெரிக்காவுடனான கூட்டிணைவோடு இணைந்து இந்தியாவில் உள்ள ஐ.நா. அமைதிகாப்பிற்கான மையத்தால் (Centre for United Nations Peacekeeping- CUNPK) இந்த பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

- இப்பயிற்சியின் முதல் இரு பதிப்புகள் முறையே 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் புதுதில்லியில் நடைபெற்றது.
- ஐ.நா.வின் அமைதிகாப்புப் படைக்கு (UN peacekeeping force) படையினை வழங்கி பங்களிக்கின்ற ஆப்பிரிக்காவின் படை பங்களிப்பு நாடுகளின் (African Troop Contributing Countries) திறனை கட்டமைப்பதும், மேம்படுத்துவதும் இந்த பயிற்சியின் நோக்கங்களாகும்.
- மேலும் இந்த ஆப்பிரிக்க நாடுகளினைச் சேர்ந்த அமைதிகாப்புப் படையின் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்குவதும் இதன் நோக்கமாகும்.



## 2019 பருவநிலை மாநாடு

- 2015-ஆம் ஆண்டின் பருவநிலை மாறுபாடு மீதான பாரிஸ் உடன்படிக்கைக்கான (Paris Agreement on Climate Change) பணி பொறுப்புடைமை ஏற்புகளை (commitments) மதிப்பாய்வு செய்வதற்காக 2019-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் பருவநிலை மாநாடு (climate summit) நடைபெறும் என ஐநா பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் (Antonio Guterres) அறிவித்துள்ளார்.
- இலத்தின் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்கான ஐநா பொருளாதார கமிஷனின் (UN Economic Commission for Latin America and the Caribbean) 37-வது அவை கூடுகையில் தொடக்க நிகழ்வின் போது அந்தோனியோ குத்தேரஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.
- 2018-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அந்தோனியோ குத்தேரஸ் முன்னாள் நியூயார்க் நகர மேயரான மைக்கேல் புளூம்பெர்க்கினை (Michael Bloomberg) பருவநிலை செயல்பாடுகளுக்கான தன்னுடைய சிறப்பு தூதராக (Special Envoy for Climate Action) நியமித்தார்.
- பருவநிலை மாறுபாட்டைத் தடுப்பதற்கான ஐநாவின் செயற் உத்திகளில் (climate strategy) ஐநா அமைப்பிற்கு ஆதரவினை வழங்குவதற்கும், 2019 ஆம் ஆண்டு ஐநாவின் பருவநிலை மாறுபாட்டை நடத்துவதற்கும் இவருக்கு பணிப் பொறுப்பு (climate strategy) வழங்கப்பட்டுள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## முதல் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கெடுப்பு

- உலக வனஉயிர் நிதியம் – இந்தியா {World Wildlife Fund (WWF)-India} அமைப்புடன் இணைந்து பஞ்சாப் மாநில அரசானது சிந்துநதி டால்பின்களின் (Indus Dolphins) முதல் ஒருங்கிணைந்த கணக்கெடுப்பை நடத்தியுள்ளது.
- சிந்துநதி டால்பின்களானது இந்தியா மற்றும் பாகிஸ்தானில் மட்டுமே காணப்படும் உலகின் மிகவும் அரிதான பாலூட்டிகளில் ஒன்றாகும்.
- பஞ்சாப் மாநிலத்தின் பியாஸ் நதியில் (Beas River) உள்ள தல்வாரா மற்றும் ஹரிகே அணைக்கட்டிற்கிடையேயான (Talwara and Harike Barrage) 185 கிலோ மீட்டர் நீள நதிப் படுகையில் 5 நாட்களுக்கு இந்த முதல் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட உள்ளது. இந்தப் பகுதியில் மட்டுமே நதிவாழ் நன்னீர் சிந்துநதி டால்பின்கள் (riverine fresh water Indus Dolphins) காணப்படுகின்றன.
- நதிவாழ் நன்னீர் டால்பின்களின் (freshwater river dolphin) துணை இனமே சிந்துநதி டால்பின்களாகும். இந்தியாவின் கங்கைநதி டால்பின்களும் (Ganges River dolphin) நன்னீர்வாழ் டால்பின்களின் துணை இனமாகும்.
- இந்தியா மற்றும் பாகிஸ்தான் வழியே பாய்கின்ற சிந்துநதி மற்றும் அதன் துணை நதிகளான பியாஸ் மற்றும் சட்லெஜ் நதிகளில் சிந்துநதி டால்பின்கள் காணப்படுகின்றன.
- சிந்துநதி டால்பின்களானது பாகிஸ்தானின் தேசியப் பாலூட்டியாகும் (national mammal of Pakistan). இவை நதியினுடைய சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை வெளிக்காட்டும் முக்கிய குறியீட்டு இனமாகும் (key indicator species of river's health).
- சர்வதேச பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கத்தினால் சிந்துநதி டால்பின்களானது அதனுடைய அச்சுறுத்தப்பட்ட இனங்களின் சிவப்பு பட்டியலில் (Red

List of Threatened Species) அருகிவரும் இனமாக (endangered Species) பட்டியலிடப்பட்டுள்ளது.



## பூபதி ஷீல்டுடெயில்

- விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் தமிழ்நாட்டின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இருந்து பூபதிஸ் ஷீல்டுடெயில் (Bhupathy's shield tail) எனும் புதிய ஷீல்டுடெயில் பாம்பு இனம் ஒன்றைக் கண்டறிந்துள்ளனர்.
- தற்சமயம் இப்பாம்புகளானது தமிழ்நாட்டின் ஆனைகட்டி மலைகளில் (Anaikatty hills) மட்டுமே வசிக்கின்றன என அறியப்படுகின்றது. இந்த ஆனைகட்டி மலைகளானது இலையுதிர் வகை தாவரங்கள் (deciduous type of vegetation) நிரம்பிய பகுதியாகும்.
- இந்தியாவின் குறிப்பிடத்தகு ஊர்வன மற்றும் நீர்நில வாழ் விலங்கின இந்திய ஆராய்ச்சியாளரான (Indian herpetologist) டாக்டர் சுப்ரமணியன் பூபதி அவர்களை கவுரவிக்கும் வகையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த புதிய பாம்பு இனத்திற்கு, அவர் பெயர் கொண்டு பூபதிஸ் ஷீல்டுடெயில் (Bhupathy's shield tail) எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இப்பாம்பு இனத்தின் விலங்கியல் பெயர் உரோபெல்டிஸ் பூபதி (Uropeltis bhupathyi) என்பதாகும்.
- இப்பாம்பினமானது அகன்ற மற்றும் நீண்டத் தலையினைக் கொண்டதனால் தன் குழுவினுடைய பிற வகை இனங்களிலிருந்து வேறுபடுகிறது.
- தற்சமயம் இப்பாம்பினமானது சர்வதேச இயற்கைப் பன்னாட்டு பாதுகாப்பு சங்கத்தின் (IUCN-International Union for Conservation of Nature) அச்சுறுத்தப்பட்ட இனங்களினுடைய சிவப்புப் பட்டியலில் (IUCN Red list of threatened species) வகைப்பாட்டிற்கு "தரவு போதாமை" (data deficient) உடைய இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- தற்சமயம் உலகம் முழுவதும் 45 அறியப்பட்ட ஷீல்டுடெயில் பாம்பு இனங்கள் உள்ளன. அவற்றில் 30 பாம்பு இனங்கள் இந்தியாவை பூர்வீக வாழ்விடமாகக் (endemic) கொண்டவை ஆகும். மீதமுள்ள 15 இனங்கள் இலங்கையை பூர்வீக வாழ்விடமாகக் கொண்டவை ஆகும்.

- ❖ Herpetology என்பது ஊர்வன உயிரிகள் மற்றும் நீர்நில வாழ் உயிரிகளைப் பற்றிப் படிக்கும் விலங்கியற் பிரிவாகும்.



# மாநிலச் செய்திகள்

## 57-வது நிறுவன தினம் – மகாராஷ்டிரா & குஜராத்

- ❖ மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களின் மாநில நிறுவன தினம் ஆண்டுதோறும் மே 1 அன்று கொண்டாடப்படுகின்றது.
- ❖ 1960-ஆம் ஆண்டு, மே 1 அன்று பம்பாய் மாநிலத்தை பிரித்ததில் மகாராஷ்டிரா மாநிலம் தனி மாநில தகுதியை (statehood) பெற்றது. மேலும் இப்பிரிவின் மூலம் குஜராத் எனும் தனி மாநிலமும் உருவானது.
- ❖ இத்தினமானது மகாராஷ்டிரா திவாஸ் (Maharashtra Diwas) எனவும் அழைக்கப்படுகின்றது. இத்தினத்தன்று மகாராஷ்டிரா மாநிலத்தின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை காட்சிப்படுத்த பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.



# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தாதா சாகேப் பால்கே சிறப்புத்துவ விருது – 2018

- தொலைக்காட்சி மற்றும் சினிமா திரைப்படத் துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினை நோக்கி மாபெரும் மகத்தான பங்களிப்பினை ஆற்றிய பொழுதுபோக்கு தொழிற்துறையைச் சேர்ந்த தனிமனிதர்களை கவுரவிப்பதற்காக 2018-ஆம் ஆண்டின் தாதா சாகேப் பால்கே சிறப்புத்துவ விருது வழங்கப்பட்டுள்ளது.



- இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ள விருதுகளானது தாதா சாகேப் பால்கே சிறப்புத்துவ விருதுகளின் 4-வது பதிப்பாகும்.
- இந்த தாதா சாகேப் பால்கே விருதுகளானது மும்பையில் அமைந்துள்ள தாதா சாகேப் பால்கே அறக்கட்டளையால் (Dadasaheb Phalke Foundation) வழங்கப்படுகின்றது.

| விருது வகைப்பாடு | விருதினை வென்றவர்கள் |
|---|---|
| சிறந்த நடிகர் (ஆண்) | ஷாஹித் கபூர் |
| சிறந்த நடிகர் (மக்கள் தேர்வு விருது) | ரன்வீர் சிங் |
| ஆண்டின் சிறந்த திரைப்படத் தயாரிப்பாளர் | அனுஷ்கா ஷர்மா மற்றும் கர்னேஷ் ஷர்மா |
| சிறந்த நடிகை (விமர்சகர் விருது) | அதிதி ராவ் ஹைதரி |
| வாழ்நாள் சாதனையாளர் விருது | சிமி காரேவால் |
| சிறந்த இயக்குநர் | அஸ்வினி ஐயர் திவாரி |

## போர்ப்ஸ் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த மனிதர்கள்

- 2018-ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் சக்தி வாய்ந்த மனிதர்கள் பட்டியலில் (2018 World's Most Powerful People list) உலகின் மிகவும் சக்தி வாய்ந்த மனிதர்களுள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி 9-வது இடத்தைப் பிடித்துள்ளார். இப்பட்டியலில் சீன அதிபர் ஜி ஜின்பிங் (Xi Jinping) முதல் இடத்தில் உள்ளார்.
- 75 நபர்களுக்கான இந்த உலகின் மிகவும் சக்தி வாய்ந்த நபர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே இந்தியத் தொழிலதிபர் ரிலையன்ஸ் இண்டஸ்டிரிஸ் நிறுவனத் தலைவரான முகேஷ் அம்பானி ஆவார்.
- தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக உலகின் மிகவும் சக்தி வாய்ந்த நபராக இப்பட்டியலில் முதலிடத்தில் இருந்து வந்த இரஷ்ய அதிபர் விளாதிமர் புதின் இந்த ஆண்டிற்கான உலகின் மிகவும் சக்தி வாய்ந்த மனிதர்கள் பட்டியலில் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளார்.
- இப்பட்டியலில் மிகவும் சக்தி வாய்ந்த நபராக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் 3-வது இடத்தில் உள்ளார். இங்கிலாந்து பிரதமர் தெரசா மே 14-வது இடத்தில் உள்ளார்.



# விளையாட்டுச் செய்திகள்

## 2018 உலக மேசை கோற்பந்தாட்ட சாம்பியன்ஷிப்

- இங்கிலாந்து நாட்டின் செப்பீல்டு நகரில் நடைபெற்ற போட்டியில் ஜான் ஹிக்கின்ஸை வீழ்த்தி மார்க் வில்லியம்ஸ் உலக மேசை கோற்பந்தாட்ட சாம்பியன்ஷிப் பட்டத்தை (World Snooker Championship) வென்றுள்ளார்.
- இவர் இங்கிலாந்தின் வெல்ஸ் பகுதியைச் சேர்ந்தவராவார் (Welshman).
- மார்க் வில்லியம்ஸ் உலக மேசை கோற்பந்தாட்ட சாம்பியன்ஷிப் பட்டத்தை வெல்வது இது மூன்றாவது முறையாகும்.
- வில்லியம்ஸ் இச்சாம்பியன்ஷிப் பட்டத்தை வெல்லும் இரண்டாவது வயதான வெற்றியாளர் ஆவார். இவருடைய வயது 43 ஆகும்.




# முக்கிய தினங்கள்

## தேசிய தொழிற்நுட்ப தினம் – மே 11

- ஆண்டுதோறும் இந்தியா முழுவதும் மே 11-ஆம் தேதி அன்று தேசிய தொழிற்நுட்ப தினம் (National Technology Day) கொண்டாடப்படுகின்றது.
- பல்வேறு துறைகளில் தொழிற்நுட்பத்தின் வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காகவும், இந்தியாவின் தொழிற்நுட்பவியல் முன்னேற்றங்களை (India's technological advancements) குறிப்பதற்காகவும் தேசிய தொழிற்நுட்ப தினம் கொண்டாடப்படுகிறது.



- 2018 ஆம் ஆண்டிற்கான இந்திய தொழிற்நுட்ப அதிகாரப்பூர்வ கருப்பொருள்- "நீடித்த எதிர்காலத்திற்காக அறிவியல் மற்றும் தொழிற்நுட்பம்" (Science and Technology for a Sustainable Future).
- இந்த தினமானது, இந்தியாவால் நடத்தப்பட்ட ஐந்து அணு சோதனைகளில் முதலாவது சோதனையான ஷக்தி நடவடிக்கை (Operation Shakthi -பொக்ரான் – II) மேற்கொள்ளப்பட்ட தினத்தை கொண்டாடுவதற்காக நினைவு கூரப்படுகிறது.
- மேலும், இந்தியா மே 11, 1998 அன்று திரிசூல் ஏவுகணையையும் வெற்றிகரமாக சோதனை செய்தது.
- இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வானூர்தியான ஹன்சா 3-யையும் இந்தியா மே 11, 1998 அன்று வெற்றிகரமாக சோதனை செய்தது.

- - - - - - - - - - - - - - -